# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு,
# அரூர் ஊராட்சி ஒன்றியம்,
# தருமபுரி மாவட்டம்.

தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், அரூர் ஊராட்சி ஒன்றிய தரப்பில் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், காலிப்பணியிட விவரம், இனச்சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவை இம்மாவட்டத்தில் www.dharmapuri.tn.nic.in என்ற இணைய தளத்தில் இடம் பெற்றுள்ளது. விண்ணப்பங்களை மேற்படி இணையதளத்தில் 10.01.2024-ஆம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 10.01.2024-ஆம் தேதி முதல் 30.01.2024-ஆம் தேதி வரை அலுவலக வேலை நேரத்தில் ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம் அரூர் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், அரூர்.